

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.10.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்தார். உடன் துரை வைகோ எம்.பி. உள்ளார்.

### கழக அரசின் சீரிய நடவடிக்கைகளால் முன்னெப்போதும் இல்லாத வகையில்

### 2025–ல் குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி!

# குறுவை - சம்பா - தாளடி பருவங்களில் நெல் சாகுபடிக்கான முன்னேற்பாடுகள்!

### வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கமான அறிக்கை!

சென்னை, அக்.9–

குறுவை – சம்பா – தாளடி பருவங்களில் நெல் சாகுபடிக்காக கழக அரசு மேற்கொண்டு வரும் விரிவான முன்னேற்பாடு கள் குறித்து வேளாண் மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கமான அறிக்கை விடுத்துள்ளார்.

2025–26ஆம் ஆண்டு குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவங்களில் நெல் சாகுபடி குறித்து வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை வருமாறு:

2021ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துவருகிறது. வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் நலன் காக்கவும், அவர்களின் பொருளாதாரம் மேம்படவும் எண்ணற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கவும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்தவும் தமிழ்நாடு அரசு பல்வேறு மானியங்கள் வழங்குவதுடன், சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களான விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் தங்குதடையின்றி உரிய காலத்தில் கிடைத்திடவும் உறுதி செய்கிறது.



இதன் அடிப்படையில், நெல் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொண்டு, உற்பத்தியை அதிகரித்திட, ஒவ்வொரு ஆண்டும் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தியது போன்றே நடப்பு ஆண்டிலும் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாட்டில் முதன்முறையாக கார்/ குறுவை/ சொர்ணவாரி பருவத்திற்கான சிறப்புத் தொகுப்புத் திட்டம் 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொள்ள மேட்டூர் அணை பாசனத்திற்காக ஜுன் 12ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு எடுத்த சீரிய நடவடிக்கைகளால் முன் எப்போதும் இல்லாத வகையில் 2025ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டை விட 2.25 இலட்சம் ஏக்கர் அதிகமாகும்.

இந்நிலையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடி பரப்பு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளதால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குறுவை நெல் வரத்து மிகஅதிகமாக உயரும் என்பதால் 02.10.2025 அன்று நெல் கொள்முதலுக்கான முன்னேற்பாடு களை முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக ஆய்வு செய்தார்கள்.

தற்போது, டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெறுவதால், சம்பா நெற்பயிர் சாகுபடி அடுத்த பத்து தினங்களில் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுநாள் வரை, சம்பா பருவ நெற்பயிர் சாகுபடி 2.64 இலட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே வேளையில் 5.50 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு, குறுவை பருவத்தில் அதிகப்பரப்பில் நெல்சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாலும், சாதகமான சூழ்நிலை நிலவியதால் இயல்பாக சம்பா பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், குறுவை சாகுபடி மேற்கொண்டதாலும், தற்போதுவரை குறுவை நெல் அறுவடை 52 சதவீதம் மட்டுமே செய்யப்பட்டிருப்பதாலும், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தொடர் மழை இருப்பதாலும் சம்பா நெல் சாகுபடி தாமதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பரப்பான 6.13 இலட்சம் ஏக்கரில் 80 சதவீத பரப்பில் அதாவது சுமார் 5 இலட்சம் ஏக்கரில் தாளடி பருவ நெல் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தற்போது 5,438 ஏக்கரில் நெல் நாற்றங்கால் தயார் நிலையில் உள்ளதாலும், மேட்டூர் அணையில் பாசனத்திற்கு போதிய நீர் இருப்பு (83.14 டி.எம்.சி) உள்ளதாலும், வடகிழக்கு பருவமழை பரவலாக பல்வேறு பகுதிகளில் பெய்துவருவதாலும், மத்திய மற்றும் நீண்டகால நெல் இரக விதைகள், போதுமான அளவில் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளதாலும், சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி இயல்பு பரப்பான 13 இலட்சம் ஏக்கருக்கும் கூடுதலாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகள் அனைவரும் தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளுமாறும், விதை தேவைக்கு அருகாமையிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

---

### யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

# மயிலம் ஒன்றியத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

விழுப்புரம், அக்.9-

மயிலம் ஒன்றியம் வீடூர், தழுதாளி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் வீடூர், தழுதாளிஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

மைலம் ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் வீடூர்ஜெகதீஸ்வரி பிரகாஷ், தழுதாளி வள்ளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்துத் துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தனையும், ரத்த அழுத்தம்,நீரழிவு நோய், சர்க்கரை,நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

முகாமில் வீடூர், பாதிராப்புலியூர், கணபதிபட்டு, தழுதாளி, கன்னியம், கொணமங்கலம், ஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி,சேதுநாதன்,மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், வீடூர் ரவி,ஒன்றிய துணைச் சேர்மன் புனித ராமஜெயம் மாவட்ட கவுன்சிலர்கள்விஜயன், மகேஸ்வரி குமரேசன், ஒன்றிய கவுன்சிலர்கள் வசந்தா, காலா, சுந்தரி, ஜமுனா ராணி,ஊராட்சி மன்ற தலைவர்கள் பானுமதி, அங்கயற் கன்னி சசிகுமார், பாக்கியலட்சுமி, சுமதி, ஒன்றிய நிர்வாகிகள் சசிகுமார், பிரகாஷ், ஜெயராமன், தமிழரசன், ராஜா , சங்கர், சின்னதுரை, சகாதேவன், மணிமாறன், கோவிந்தராஜ், சேகர், சம்சுதீன், ராஜ் பரத், பாஸ்கர், அணி அமைப்பாளர் செந்தில்குமார் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தலைவர்கள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன் நன்றி கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் வரிகல், கொணலூர் ஆகிய ஊராட்சிகளில்செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ்தலா 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டபுதிய நாடக மேடை கட்டிடத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, அனந்தபுரம் நகர அவைத் தலைவர் டாக்டர் கல்யாண் குமார்,ஊராட்சி மன்ற தலைவர்கள் சுபா குமார், ரவி, தாட்சயானி கார்த்திகேயன், ஒன்றிய நிர்வாகிகள் செல்வமணி, குமார், வாசு, அய்யாதுரை, இக்பால் ஆகியோர் உள்ளனர்.

---

# கல்வி தந்த முதல்வருக்கு நன்றி சொன்ன மாணவச் செல்வங்கள்!



கல்வியை இல்லம் தேடிச் சென்று வழங்கிய திராவிட மாடல் ஆட்சியின் முதல்வருக்கு, பயனடைந்த மாணவச்செல்வங்கள் நன்றியுடன் நடத்திக் காட்டிய கண்களைக் குளமாக்கும் உணர்ச்சிமிகு நிகழ்ச்சிகள் அண்மையில் நடந்தேறின.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் 25.9.2025 ஆம் நாள் தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த்ரெட்டி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில் தமிழ்நாடு . முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், . துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மற்றும் அமைச்சர்களும், பல்துறை அறிஞர்களும், கலைத்துறை இயக்குனர்களும், நடிகர்களும், தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், சமூகபொருளாதார ஏற்றத்தாழ்வற்ற அனைத்துக் குடும்பங்களைச் சார்ந்த அரசுப் பள்ளிகளில் பயிலும் இருபால் மாணவர்களுக்கும், விரும்பிய கல்வி கற்பதற்கும் வெளிநாடு சென்று கல்வி கற்பதற்கும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயிற்சிகளில் பயிற்சி பெறவும், குடும்பங்களின் பொருளாதாரச் சூழ்நிலைகள் தடையாக இருக்குமாயின் அத்தகைய தடைகளைத் தகர்த்துவிட்டு விரும்பிய கல்வியை விளையாட்டுப் பயிற்சியை, விளையாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பை, விரும்பும் இடத்தில் பெறுவதற்கான வாய்ப்பினை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் திராவிட மாடல் அரசு உருவாக்கும் என பிரகடனப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அதற்கான செயல்திட்டங்களையும் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் . தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

அப்படி அறிவிக்கப்பட்டத் திட்டங்கள்தான் “தமிழ்ப் புதல்வன்”, “புதுமைப்பெண்”, “நான் முதல்வன்” ஆகிய திட்டங்களாகும்.

இந்தத் திட்டங்களுக்கு இருபால் மாணவர்களை ஊக்குவிக்கும் உயர்ந்த நோக்கத்துடன், அறிவிக்கப்பட்ட “காலை உணவுத் திட்டம்” தொடக்கநிலையிலேயே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் பல மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் திசை வழிகாட்டும், ஓர் கலங்கரை விளக்கமாகக் கருதப்படுகிறது. ஆம்! பின்பற்றவும்படுகிறது. இந்தத் திட்டங்களால் பன்முக ஆற்றலைப் பெற்று பயனடைந்த இருபால் மாணவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தங்களின் அபிலாசைகளையும், ஏக்கங்களையும், குடும்பச் சூழ்நிலைகள் மற்றும் ஏழ்மைக் காரணமாக கானல் நீராகிவிடுமோ என்ற துயரத்திலும், துன்பத்திலும் கண்களைக் குளமாக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், . தமிழ்நாடு முதல்வரின் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களாக கருதப்படும் “நான் முதல்வன்”, “புதுமைப்பெண்”, “தமிழ்ப் புதல்வன்” ஆகிய திட்டங்களின் மூலம் அரசுப் பள்ளிகளில் படித்த இருபால் மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டதன் மூலம் ஏக்கப்பெருமூச்சுகளோடும், தங்களின் அபிலாசைகள் நிறைவேறுமா? என்ற கேள்விக்குறியோடும் தவித்துக்கொண்டிருந்த இருபால் மாணவர்களும், உதவித்தொகைகளைப் பெற்று, தங்களுடைய குறிக்கோள்களை வெற்றிகரமாக நிறைவு செய்தப்பின்னர் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நன்றி தெரிவிக்கும் முறையில் குழுமியிருந்த இருபால் மாணவர்கள் தெரிவித்த உணர்வுப்பூர்வமான வாழ்க்கைப் போராட்டத்தில், . தமிழக முதல்வரின் திட்டங்கள் எப்படியெல்லாம் தங்களுக்கு உதவிக்கரம் கொடுத்து தங்களது வெற்றியை உறுதி செய்தது என்பன போன்றச் செய்திகளை கண்ணீர்மல்க விளக்கிச் சொல்லிய இருபால் மாணவர்களின் சோக வரலாறு பார்வையாளர்களின் கண்களைக் குளமாக்கியது என்பதை என்னால் நேரடியாகவே காண முடிந்தது.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

அரங்கத்திலே அமர்ந்திருந்த அனைவரும் இருபால் மாணவர்களின் இலக்கு நோக்கிய வெற்றிக்கு எப்படி திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் பாதைகளாகவும், படிக்கட்டுகளாகவும் அமைந்தன என்பதை விளக்கிச் சொல்லும் பொழுது அரங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடியதைப் பார்க்க முடிந்தது. இந்த அளவிற்கு உணர்வுப்பூர்வமான திட்டங்களை நிறைவேற்றி, விரும்பிய கல்வி என்பது எட்டாக்கனி என்ற ஏங்கித்தவித்த ஏழை மாணவர்களுக்கு எவ்வளவு உயரத்தில் கல்வி எட்டாக்கனியாக இருந்தாலும், அதை ஏழை மாணவர்களின் கரங்களில் சேர்ப்பிக்கும் மனிதாபிமான செயல்களைச் செய்துக்காட்டிய . தமிழக முதல்வரையும், துணை முதல்வரையும் நோக்கி மன்றத்தில் அமர்ந்திருந்த அனைவரின் பார்வையும் நன்றியைத் தெரிவித்தது. அந்தப் பார்வை நிச்சயம் அந்த மகத்தான மனிதநேய தலைவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பார்வையாகத்தான் அறிய முடிகிறது.

கல்வி என்பது குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ, வாய்ப்பு வசதியுள்ளவர்களுக்கோ மட்டும் உரித்தானதல்ல. மாறாக, எங்கோ மலைப்பகுதிகளில், காட்டுப் பகுதிகளில், போக்குவரத்து தொடர்பில்லாத குக்கிராமங்களில் வாழக்கூடிய, அன்றாடம் உழைத்து வாழக்கூடிய, அது மட்டுமல்ல சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்க்கைப் போராட்டத்தை ஒவ்வொரு நொடிப்பொழுதும் நடத்திக் கொண்டிருக்கக் கூடிய சாதாரண, சாமானிய உழைப்பாளிகளின் வாரிசுகளுக்கும் கல்வி என்பது அவர்களது உரிமை. அந்த உரிமையை உறுதி செய்ய வேண்டிய கடமை மக்களாட்சிக்கு உண்டு என்பதை உணர்ந்து, அதனைதலையாயக்கடமையாகக்கருதி நிறைவேற்றிச் சாதனைப் படைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு என்பதையும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதையும், வரலாறு பொன்னெழுத்துக்களால் பதிவு செய்திருக்கிறது!! இந்த நிகழ்வில் ஆய்வுக்குரிய முக்கியமான செய்தி எதுவெனில், மண்ணுக்குள் மட்டும் இயற்கை வளங்கள் பொதிந்து கிடக்கவில்லை. மாறாக, மனித மூளையின் அடுக்குகளுக்குள்ளே அறிவும், ஆற்றலும் புதைந்து கிடைக்கிறது! இந்த ஆற்றலும், அறிவும் ஜாதி, மதம், இனம் பார்த்து படிவதில்லை. மாறாக, எல்லா மனிதனிடமும் ஆற்றலும், அறிவும் வேறுபாடின்றி புதைந்து கிடக்கின்றது என்பதுதான் எதார்த்தம்!! எங்கோ வாழுகின்ற மனிதர்களாக இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழுகின்ற மனிதர்களாக இருந்தாலும் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பும், வசதியும் கிடைக்குமானால், நிச்சயம் ஆற்றலும், அறிவும் தங்குதடையின்றி வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த அறிவியல் பூர்வமான உண்மைகளை ஆய்ந்தறிந்த தமிழ்நாட்டின் முதல்வரும், துணை முதல்வரும் அறிவியல் பூர்வமான திட்டங்கள் மூலம் மேற்கொண்ட அகழாய்வின் வெளிப்பாடுதான் இந்தத் திறமைகள் என்பதையும், மாணவர்களிடமிருந்து இந்த ஆற்றலையும், திறமையையும் வெளிப்படுத்திய சமூக விஞ்ஞானிகள்தான் இவர்கள் என்பதையும் எதிர்கால சமுதாயம் மதிப்பீடு செய்துப் போற்றிப்பாராட்டும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

துணை முதல்வர் விளையாட்டுத்துறையில் மேற்கொண்ட தனிகவனமும், அக்கறையும் தமிழ்நாட்டு இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகளில் அகிலஇந்திய அளவிலும், உலக நாடுகள் அளவிலும் நடைபெறுகிறப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க விளையாட்டுகளில் முதலிடத்தில் வெற்றி பெறுகிறார்கள் என்றால், அதற்கான ஊக்கத்தையும், உத்வேகத்தையும், அதற்கான மற்ற வாய்ப்புகளையும், சூழ்நிலைகளையும் உருவாக்கித் தந்த பெருமை முதலமைச்சரையே சாரும் என்றால், அது எந்த வகையிலும் மிகையான கூற்றல்ல. இது மட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் இவர்களுக்கெல்லாம் சமூகத் தகுதியை வழங்கி கல்வி கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பினை உருவாக்கி அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களுக்கான ஆற்றலையும், பெருமையையும் உருவாக்கித்தந்த தனிப்பெரும் கருணையுள்ளம் . தமிழக முதல்வருக்கும், துணை முதல்வருக்கும் நிரம்ப உண்டு என்பதை நம்மாலே அறிய முடிகிறது. மாற்றுத்திறனாளிகளும், திருநங்கைகளும் ஒரு காலத்தில் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், திராவிட மாடல் ஆட்சி அப்படி புறக்கணிக்கப்பட்டவர்களுக்கெல்லாம், பாதுகாக்கின்ற சட்டங்களையும் அவர்களுக்கு சமூக அந்தஸ்தை வழங்கக்கூடிய கல்வி, வேலைவாய்ப்பு, விளையாட்டுப் போட்டிகளில் முன்னுரிமை ஆகியவைகளை வழங்கி, அவர்களுடைய திறமைகளை வெளிக்கொண்டுவந்த வரலாற்று நிகழ்வுகளும் இந்த திராவிட மாடல் ஆட்சியிலே தான் அரங்கேறியிருக்கிறது. இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு காலகட்டத்தில், ஈடுபாட்டுடன் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்த முதல்வர் அவர்கள் ஒரு மாணவி தன்னுடைய பெற்றோரை விழிக்கும் பொழுது தன்னுடைய பெற்றோர் துப்புரவுத்தொழிலாளர்கள் என்று குறிப்பிட்டார். உடனடியாக, முதல்வர் அவர்கள் தலையிட்டு, துப்புரவுத்தொழிலாளர் என்று விழிக்க தேவையில்லை. மாறாக, தூய்மைப்பணியாளர் என்று குறிப்பிட வேண்டும் என்ற திருத்தத்தைத் தெரிவித்தார்.

இதிலிருந்து, முதலமைச்சரின் சிந்தனை எதுவெனில், வார்த்தைகளில்கூட அவர்கள் செய்யும் தொழிலுக்கு கலங்கத்தை உருவாக்கிவிடக் கூடாது. அதன் மூலம் தாழ்வுமனப்பான்மையையும் உருவாக்கக் கூடாது என்ற உளவியல் சிந்தனைதான் காரணம் என்பதை உணர முடிகிறது. எனவே, தமிழ்நாட்டின் முதல்வர் சிந்தனையிலும், செயலிலும் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற அடிப்படைக் கோட்பாட்டில் எள்ளின் முனையளவுக்கூட சேதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில், அக்கறையோடும், ஆர்வத்தோடும் இருக்கிறார் என்பதுதான் இந்த நிகழ்வு உணர்த்தும் பாடமும், படிப்பினையுமாகும். இந்தத் திட்டத்தாலே பயன்பெற்ற இன்னொரு மாணவி, தான் ஆசிரியராக வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்தவுடன், அந்த மாணவியை அழைத்து தன் சட்டைப்பையிலேயிருந்த பேனாவை எடுத்து வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இன்னொரு மாற்றுத்திறனாளி ஒருவர் தன்னுடைய திருமணத்திற்கு துணை முதல்வர் வரவேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்றுத் துணை முதல்வர் தன்னுடைய சொந்த ஊருக்கே வருகைத்தந்து எங்களை வாழ்த்தினார் என்ற செய்தியை கண்ணீர்மல்க தெரிவித்த பொழுது, மன்றத்திலிருந்த அனைவரும் துணை முதல்வரைப் பாராட்டி மகிழ்ந்தனர். நிகழ்ச்சியின் ஒரு கட்டத்தில் முதல்வர் அவர்கள் இருபால் மாணவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளையும், திராவிட மாடல் ஆட்சியின் திட்டப்பயன்கள் எந்த அளவிற்கு அவர்களது வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்பதை எண்ணி, மகிழ்ந்து மாணவச்செல்வங்களையெல்லாம் பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சி என்பது, உணர்வுப்பூர்வமான ஒரு குடும்ப நிகழ்ச்சியாகவும், அந்த குடும்பத்தின் வாரிசுகள் பெற்ற வெற்றிகளைப் பாராட்டுகின்ற ஓர் வரலாற்று நிகழ்வாகவும்தான் அனைவராலும் மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் நடத்தப்பட வேண்டும் என்பதே கண்டோர் அனைவரின் விருப்பமும் எதிர்பார்ப்புமாகும்!